NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**
**மாதாந்த அறிக்கை – 2016 ஓகஸ்ட்**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 ஓகஸ்ட் மாத ஆவணவாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 1984 | 25918 |
| கையெழுத்துப் பிரதி | 05 | 168 |
| பத்திரிகை நறுக்குகள் | 14 | 1236 |
| புகைப்படவாக்கம் | 04 | 960 |
| தரமேம்படுத்தல்கள் | 97 | 3812 |
| பக்கம் தவறியவை / சிதைந்தவை | 35 | 840 |
| மொத்தம் | 2139 | 32934 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 40 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு 110 தரமேம்படுத்தல் ஆவணங்கள் வலைத்தளத்தில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. மிகுதி ஆவணங்கள் செப்ரெம்பர் மாத முதல் கிழமைகளில் பதிவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- ஆவணங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பக்கங்கள் தவறிய, சிதைந்த ஆவணங்களும் மின்வருடப்பட்டன

- இதழியல் தேடலினை இலகுபடுத்துவற்காக முன்னெடுக்கப்படும் அறிமுகக்குறிப்பு இணைக்கும் பணியில் இம்மாதம் 100 இதழ்களுக்கான அறிமுகக் குறிப்பு இணைக்கப்பட்டுள்ளன.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- ஆவணவாக்கலில் ஆசிரியர்கள் மற்றும் பதிப்பாளர்களான சௌந்தரராஜன், சுந்தரம்பிள்ளை, செங்கை ஆழியான் ஆகியோரின் சேகரிப்புக்களும் சன்மார்க்க சபை, மறுமலர்ச்சி மன்ற சேகரிப்புக்களும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. வெளியீடுகளை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

ஓகஸ்ட் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

- வெளியீட்டாளர்கள்
    - புது விதி
    - லண்டன் உதயன்
    - லண்டன் குரல்
    - தேசம்
    - துளிர்கள்

- எழுத்தாளர்கள்
    - இரா.கனகரத்தினம்
    - பண்டிதர் தம்பிஜயா
    - செ.தியாகராஜா
    - பேதுரு பிலிப்
    - சோமஸ்கந்தராஜா
    - சி.வேலும்மயிலும்
    - சி.ரகுநாதன்
    - வே.இளையகுட்டி
    - க.முருகேசு

**வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம்**

வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் 931 பதிவுகள் மேலதிக தகவல்களுடன் இற்றைப்படுத்தப்பட்டன.

**வரவு செலவு அறிக்கை**

- ஓகஸ்ட் மாதத் தேவைகளுக்காக ரூ. 408,000.00 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 288,000.00 உம் ஆவணங்களை சேகரிப்பதற்கான வன் தட்டுக்கள் ரூ. 39,500.00 உம் வாடகை, தொலைபேசி, இணையம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.

- கனடா அன்பர்களிடமிருந்து ரூ. 131,700.00, நோர்வே அன்பர்கள் ஊடாக ரூ. 86,150.00 மற்றும் அவுஸ்திரேலியா, இலங்கை அன்பர்கள் ஊடாக ரூ. 26,000.00 ம் நன்கொடையாக இம்மாதம் கிடைக்கப்பெற்றது.

  இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.